# கீழ்குளம் வில்லவன் கவிதைகளில் தொழிலாளர் நிலை

***தே. வேதராஜ்***
(பதிவு எண் 17221174021021)
முனைவர் பட்ட ஆய்வாளர்

***முனைவர் ஓய். ஃபிறீடா கன்ஷீலா***
உதவிப்பேராசிரியர், தமிழ் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5055

*கவிஞன் என்பவன் சமூகத்திலிருந்து வேறுபட்டவன் அல்ல. அவனும் சமூகத்தின் உள்ளடக்கம். சமூகத்தின் ஓர் அங்கம். எனவே சமூகத்தின் ஒவ்வொரு அசைவும் அவனைப் பாதிக்கும்; பாதிப்புக்குள்ளாக்கும். இந்த நிலையில் சமூகத்திலுள்ள ஒவ்வொன்றும் அவனது பாடு பொருளாகின்றன. சமூகம் என்பது பலதரப்பட்ட மக்களை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பு ஆகும் இதில் உழைக்கும் வர்க்கம் என்பது சமூகத்தின் அச்சாணி ஆகும். இந்த உலகம் சுத்தமாக, சுகாதாரமாக, ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக இருப்பதற்கு உழைப்பு தான் மிகப்பெரிய மூலதனமாகும். எனினும் உழைக்கும் மக்களுக்குப் போதிய சமூக அங்கீகாரமோ, மரியாதையோ பல நேரங்களில் கிடைப்பதில்லை. அவர்கள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைகள் ஏராளம். இது ஒருபுறமிருக்க எவ்வளவு கடினமாக உழைத்தாலும் போதிய வருமானமின்றி வறுமையில் வாடுகின்ற நிலையும் இன்னொரு புறம் தொடர்கிறது. இது குறித்து காலந்தோறும் படைப்பாளிகள் பல்வேறு நிலைகளில் பதிவுசெய்துள்ளனர். அந்த வரிசையில் கவிஞர் வில்லவனும் தனது கவிதைகளில் உழைப்போர் நிலைகளைப் பதிவு செய்துள்ளார். அது குறித்து இக்கட்டுரை தொட்டுக்காட்ட முயல்கிறது.*

### கவிஞர் அறிமுகம்

கவிஞர் வில்லவன் இந்தியாவின் தென்கோடி மாவட்டமான குமரியின் மைந்தர். “கீழ்குளம்” என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் ஜேசுராஜ் என்பது. “வில்லவன்” என்பது இவரது புனைப்பெயர். பள்ளிப் படிப்பிற்குப் பின் ஆசிரியர் பயிற்சி பெற்று தொடக்கப்பள்ளி ஆசிரியரானார். தொடர் முயற்சியின் விளைவாக

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரானார். இளமையிலேயே எழுத்துலகில் கால் பதிக்கத் தொடங்கியவர். கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல வடிவ எழுத்துகளிலும் வல்லவர். இவரது நாடகங்கள் சாதி, மத வேறுபாடின்றி அனைத்து மேடைகளிலும் நடிக்கப்படுபவை. இவர் சிறந்த மேடைப் பேச்சாளரும் கூட. எழுத்துப்பணியோடு சமூகப் பணியினையும் இணைத்து செய்து வருபவர்.

**கவிஞரைக் குறித்துப் படைப்பாளர்கள்**

இவரைக் குறித்து கவிப்பேரரசு வைரமுத்து கூறுகையில்,

புலன்களை வருடிக் கொடுப்பது மட்டுமல்ல புதுக்கவிதை என்பதைப் புரிந்து கொண்டு எழுதுகிற புதுக்கவிஞர் கூட்டத்தில் வில்லவன் குறிப்பிடத்தக்கவர்..

நிகழ்கால சமூகக் கொடுமைகளின் மீது வாள் வீசுகின்ற கோபம் இதில் வடிவம் கொண்டிருக்கிறது. (சூரியக் கனவுகள், அணிந்துரை) என்கிறார்.

அறிவர் சாமுவேல் தாசன், "வில்லவன்! பாரதிபரம்பரையில்வந்திருக்கும்ஒருபுதுக்கவிஞன். நிகழ் காலத்தின் விளைவுகளான அவன் கவிதைகள் எதிர் காலத்தைப் படைக்கும் ஆற்றல் கொண்டவை" (கிழக்கு சிவக்கும், அணிந்துரை) என்கிறார்.

கவிஞரின் "சூரியக் கனவுகள்' நூலுக்கு வாழ்த்துரை எழுதிய பேராசிரியர் இரா. தியாகசுவாமி "புதிய திசை காட்டும் புதிய படைப்பு" என வருணிக்கிறார்.

கவிஞரைக் குறித்த இந்த விமர்சனங்கள் மிகையானவை அல்ல. முழுக்க முழுக்க இயல்பானவை. மேற்கூறிய அனைத்து விமர்சனங்களும் கவிஞர் சமூகத்தின் மீது கொண்டுள்ள கரிசனையை, சமூக மேம்பாட்டு உணர்வை தெளிவாகக் காட்டுகின்றன.

**கவிஞரின் படைப்புகளில்**

கவிஞர் வில்லவன் ஒரு முற்போக்கு எழுத்தாளர். சமூக மேம்பாட்டிற்காய் எழுதும் எழுத்தாளர்களுள் இவரும் குறிப்பிடத்தக்கவர். சமூக வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டுமானால் தொழிலாளர் நலன் காக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் படும் அவலங்கள் சமூகத்தில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் மாபெரும் சக்தியாக உள்ளது. இதனை உலக வரலாறும் பதிவு செய்துள்ளது. உழைப்புச் சுரண்டல், வறுமை, ஏற்றத்தாழ்வு இவை போன்றவை உழைக்கும் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஏராளம் ஏராளம். இவை சார்ந்த கருத்துக்களை ஆசிரியர் தம் படைப்புகளில் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

**உழைப்புச் சுரண்டல்**

காலங்காலமாக இந்தச் சமூகத்தில் நிகழ்ந்து வருகின்ற அவலங்களுள் ஒன்று உழைப்புச் சுரண்டல் என்பது. ஒருவன் ஓடாய் உழைத்துத் தேய்கிறான். மற்றொருவன் அந்த உழைப்பின் பயனால் வளர்கிறான். செல்வத்தில் செழிக்கிறான். இதனை, "தேன் கூடுகள்" எனும் கவிதையில்,

**தேன் நிறைந்துவரும் காலத்தில் - அவன்**
**கூட்டைத் திறக்கிறான்;**
**தேனைக் கறக்கிறான்!**
**தேன் நிறைய இல்லாவிட்டால் கூட**
**இருப்பதி எடுக்கிறான்! பிழிந்து எடுக்கிறான்!**
**இப்போது புரிகிறது ஈக்களுக்கு**
**இவன் கூடு கட்டியது**
**ஈக்கள் வாழ்வதற்காக அல்ல**
**இவன் வாழ்வதற்காக் என்று!**
**மறுபடியும் உழைப்பு!**
**மறுபடியும் கறப்பு!**

***(உழைப்பின் நிறம் கறுப்பு, பக். 32 – 33)***

எனப் பதிவு செய்கிறார். உழைப்புச் சுரண்டலை இதை விட அழுத்தம் திருத்தமாகக் கூற முடியுமா எனத் தெரியவில்லை.

பல எதிர்காலக் கனவுகளுடன் ஆடிப் பாடி தேன் சேகரித்து வைக்கும் தேனீக்கள், தங்கள் உழைப்பு முழுவதும் சுரண்டப்பட்ட பின்பும் எதிர்த்துப் போராடவோ, வெளிநடப்பு செய்யவோ, குறைந்த பட்சம் ஒரு கோஷம் எழுப்பக் கூட செய்யாமல் (செய்ய இயலாமல்) பாவம் மறுபடியும் அந்தக் கூட்டில் தான் கூடுகின்றன. ஒரு கூடு வைத்த முதலாளிக்கு இப்போது ஊர் முழுக்க கூடுகள். உழைப்புச் சுரண்டலின் உச்ச கட்ட வேதனை கூட இங்கு அமைதியாய் எந்த அரவமும் இல்லாமல் நிகழ்கிறது என்பது வேதனையான உண்மை. இந்தக் கவிதையில் ஆசிரியரின் உள்ளக் குமுறலோடு முதலாளியைக் குறித்த நையாண்டித் தனமும் வெளிப்படுகிறது.

பண்ணையாருக்குச் செல்வம் தரும் கற்பக மரமான பனை மரங்கள் தொழிலாளர்களுக்கோ பாடுகளும் வேதனையும் நிறைந்த, உயிரைப் பறிக்கும் சிலுவை மரங்களாக உள்ளன என்பதை,

**பண்ணையாருக்குத்தான்**
**பனைகள்**
**கற்பக மரங்கள்**
**பனையேறும் தொழிலாளருக்கோ**
**அவை**
**சிலுவை மரங்கள்**

**(சூரியக் கனவுகள், ப.98)**

எனும் கவிதை வரிகளாக்குகிறார்.

இந்தக் கவிதை குறித்து கவிப்பேரரசு வைரமுத்து "இந்தக் கவிதை அங்கதத்தை விட ஆதங்கத்தை அதிகமாக வெளிப்படுத்து கிறது. ஒவ்வொரு பனை மரமும் எனக்கு இனிமேல் இந்தக் கவிதையைத் தான் நினைவுபடுத்தப் போகிறது" என்று கூறுவது இங்கு நினைக்கத்தக்கது.

## வறுமை

உழைப்பு சுரண்டப்படுவது ஒரு பக்கம். அதே நேரம் உழைப்புக்கு ஏற்ற கூலி மறுக்கப்படுவது மறுபக்கம் என உழைப்பாளிகள் நசுக்கப்படுவது புதிதொன்றுமல்ல. காலந்தோறும் நடந்தேறி வருகிற அவலக் காட்சி தான். இதனால் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் அவர்களது வறுமை அவர்களை ஒட்டிக் கொண்டிருப்பதை பலக் கவிதைகளில் ஆசிரியர் காட்சிப்படுத்தியிருக்கிறார்.

பனை ஏறுதல் என்பது மிகக் கடினமான ஒரு தொழில். உயிரைப் பணயம் வைத்துச் செய்யப்படும் தொழில் அது. பனை ஏறும் தொழிலாளர்களின் கை, கால், மார்பு அனைத்தும் வடுக்கள் நிறைந்திருக்கும். பனை மரத்தில் பதநீர் எடுப்பதற்குத் தினமும் இருமுறை (ஒரே மரத்தில்) மரத்தில் ஏற வேண்டும். வேலையின் கடினப்பாடு கருதியே இப்போதெல்லாம் பனையேறும் தொழில் அருகி வருகிறது. முட்கள் போன்று கரடு முரடான பகுதிகளாலான பருத்த, மிகவும் உயரமான மரம் பனை. கறுப்பு நிறத்தில், கிளைகள் ஏதும் இன்றி கெம்பீரமாக நிற்கும் பனை மரங்கள் உண்மையில் காண்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் தன்மை கொண்டவை. பனை மரங்களின் பயன் கருதி இவற்றுக்கு கற்பகத்தரு என்ற ஒரு பெயரும் உண்டு.

ஆனால் பனையேறும் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மிகவும் வருத்ததிற்குரியதாகவே காணப்படுகின்ற நிலையினை, "சிலுவை மரங்கள்", "அவர்கள் இனி அழமாட்டார்கள்", "பனை விஞ்ஞானிகள்" எனும் கவிதைகளின் வாயிலாக விளக்குகிறார்.

**முரட்டுப் பனைகளில்**
**ஏறிக் கொண்டிருப்பதால்**
**இவர்களுக்குக்**
**கையிலும் காலிலும்**
**மார்பிலும் காயங்கள்!**

.

**பனையைப் போல**
**இவர்களின் வாழ்க்கை**
**கறுப்பாகவே காட்சி தருகிறது**

**(சூரியக் கனவுகள், ப.100)**

எனும் கவிதை வரிகள் அவர்களின் வாழ்க்கையின் இருட்டுப் பகுதியைப் பனை மரத்தோடு ஒப்புமைப்படுத்திக் கறுப்பாகக் காட்சிப்படுத்துவது சிந்தனைக்குரியது.

அது போலவே மீனவர்களும் கடலில் சென்று கடினப்பாடுகளினூடே தொழில் செய்தாலும் அவர்கள் மேம்பட்ட வாழ்வினை அடைய முடிவதில்லை. மீனவர்களின் வாழ்க்கையினையும், தொழிலின் கடினப்பாடுகளையும் "கடல் பயணங்கள்" எனும் கவிதையாய் வடித்துள்ளார் ஆசிரியர்.

***வாழ்க்கையைத்***
***தேடுவதற்காக***
***மரணத்தின் அருகில்***
***குடியிருப்பவர்கள்***
***இவர்கள்***
***.***
***கரையில் அமர்ந்து கொண்டே***
***இவர்களை***
***வெளிநாடுகளுக்கு அனுப்பும்***
***ஏஜெண்டுகளுக்கு தங்க மீன்கள்***
***வந்து சேர்கின்றன.***
***கடலில் போராடும் இவர்களுக்கோ***
***கைகளில் வரும் மீன்களும்***
***வழுவி விடுகின்றன***
***மேலது, (பக். 104 - 105)***

என்பதே கவிதை. இந்த வரிகள் மீனவர்தம் தொழிலின் ஆபத்தினையும், எவ்வளவு பாடுபட்டு உழைத்தாலும் அவர்களது வறுமை தீராத நிலையினையும் காட்டுகிறது.

"வீதியிலே நிற்கிறோம் எனும் கவிதையில் மாட்டு வண்டி ஓட்டுவோர் வறுமை நிலை சுட்டப்பட்டுள்ளது.

***வாழ்க்கையை ஓட்டுவதற்காக***
***வண்டியை ஓட்டுபவர்கள்***
***நாங்கள்***
***வண்டி***
***ஓடுகிறது***
***ஆனால்***
***வாழ்க்கைதான்***
***ஓட மறுக்கிறது!***
***வண்டியைப் போலவே***
***எங்கள் வாழ்க்கையும் வீதியில்தான் நிற்கிறது***
***(கிழக்கு சிவக்கும், பக்.63 -64)***

உழைக்கின்ற வர்க்கத்துக்கு வறுமை வளர்பிறையாக இருப்பதால் அவர்களது வாழ்க்கை தேய்பிறையாகிக் கொண்டிருக்கிறது (கிழக்கு சிவக்கும், ப. 16) என ஆதங்கப்படுகிறார் ஆசிரியர்.

**ஏற்றத்தாழ்வு**

தனி மனித, குடும்ப பொருளாதார நிலை சமூக ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்தும் காரணிகளில் முதன்மையான இடம் பெறுகிறது.

பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏழை செல்வன் எனும் நிலையை உருவாக்குகிறது. இதற்குக் காரணம் முன்னரே கூறப்பட்ட உழைப்புச் சுரண்டல் தான் என்பதை ஆசிரியர் பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார்.

உழைத்துப் பிழைப்பவர்களை விடச் சுரண்டிப் பிழைப்பவர்கள் அல்லவா இங்கு சுகமாக வாழ்கிறார்கள். எறும்புகளின் வாழ்க்கையை விட அட்டைகளின் வாழ்க்கை தான் இங்கு வளமாக இருக்கிறது. உழைப்பவனின் பொருளும் உரிமையும் மட்டுமின்றி, அவனது புகழும் இங்கே சுரண்டப்படுகின்றன. (நீ போகும் பாதைகள், ப.5)

உழைப்பவர்களுக்கு உரிய கூலி மறுக்கப்படுவதும், அவர்களது உழைப்பு சுரண்டப்படுவதும் முதலாளிகளைச் சுகமாகவும், வளமாகவும் வாழ வைக்கிறது. தொழிலாளர்கள் வறுமையினையும், வெறுமையினையும், விரக்தியினையும் அடைகிறார்கள். சமுதாயத்தில் சமத்துவம் இல்லாத நிலையினை,

**சில நிறுவனங்களும் இயக்கங்களும்**
**"சமத்துவம்" என்று போர்டு வைத்துள்ளன**
**ஆனால் முதலாளித்துவத்தை நோக்கி**
**வெகுவிரைவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன!**
***(உழைப்பின் நிறம் கறுப்பு,ப.37)***

எனும் கவிதையாக வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

## முடிவுரை

உழைப்பை மையமாகக் கொண்டுதான் மானுடம் தன் வளர்ச்சிப் பயணத்தைத் தொடங்கியது. சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, தனி மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கும் உழைப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். (இராஜ துரை, ப.45) சமுதாய வளர்ச்சிக்கும், தனிமனித வளர்ச்சிக்கும் உழைப்பு மிகவும் அவசியமானது என்பது தான் கவிஞரின் கருத்தும். எனவே தான் தொழிலாளர்களின் அவல நிலையினைக் கவிதைகளாக்கி, அவர்தம் உள்ளக்குமுறலை வடித்துள்ளார். உழைப்பு தான் உரிமை வாழ்வுக்கு அடிப்படை எனும் கருத்துக்கு மிகவும் அழுத்தம் கொடுக்கும் கவிஞர் தொழிலாளர் வாழ்வில் விடியல் பிறக்க வேண்டும் எனும் அளவிட முடியாத தனது ஆசையினைப் படைப்புகள் தோறும் வெளிப்படுத்துகிறார்.

## துணைநூல் பட்டியல்

1. இராஜதுரை, எஸ்.வி, அந்நியமாதல், க்ரியா, சென்னை, 1979
2. சீனிவாசன் நம்., வைரமுத்து ஆய்வுக் களஞ்சியம், காவ்யா, சென்னை - 600024,2009
3. வில்லவன் கீழ்குளம், உழைப்பின் நிறம் கறுப்பு, மேரா பிரிண்டர்ஸ், 2015
4. மேலது, கிழக்கு சிவக்கும், கண்ணம்மா பதிப்பகம், 2014
5. மேலது, சூரியக் கனவுகள், மேரா பிரிண்டர்ஸ், 2014
6. மேலது, நீ போகும் பாதைகள், கண்ணம்மா பதிப்பகம், 2004